உ

ஓம் நமசிவயசகாயம்

இஃது,

ஸ்ரீகைலாய பரம்பரை

திருவாவடுதுறை மகாவாதீனத்தைச் சேர்ந்த

# திருவீழிமிழலைத் தலப் புராணம்

## 2-வது மனு, தவஞ்சேர்படலம்.

இஃது

மாயூரந் தாலூகா கடகம்,

தமிழ் வித்துவான்

வே. சோமசுந்தரஉடையார்,

அவர்களால் செய்யப்பட்டு,

ஷை திருவாவடுதுறை ஆதினம் காரியர்

ஸ்ரீலஸ்ரீ வைத்தியநாததம்பிரானவர்கள்பேருதவியாலும்

மனுதபஞ்சேர் கிராமத்தார்கள்பேருதவியாலும்,

அச்சிடப்பட்டு,

ஷை திருவாவடுதுறை ஆதீனம்

மாட்சிமை தங்கிய மகா சந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக ஸ்வாமிகட்கு,

அர்ப்பணஞ்செய்யப்பட்டது

முதற் பதிப்பு காப்பிகள் 1000.

கும்பகோணம் லெக்ஷிமிவிலாஸ பிரஸில் பதிப்பிக்கப்பட்டது

காப்பிரைட்ரிஜிஸ்டர்

இதன் விலை] 1916. [அணா 3

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
12 AUG 1916
MADRAS

5816

3-16

183652

உ

ஓம் நமசிவயபசகாயம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
12 AUG 1916
MADRAS.

இஃது,

ஸ்ரீ கைலாய பரம்பரை
திருவாவடுதுறை மகாவாதீனத்தைச் சேர்ந்த

# திருவீழிமிழலைத் தலப் புராணம்.

## 2-வது மனு, தவஞ்சேர்படலம்,

இஃது
மாயூரந்தாலுகா கடகம்,
தமிழ் வித்துவான்
**வே. சோமசுந்தரஉடையார்**
அவர்களால் செய்யப்பட்டு,

௸ திருவாவடுதுறை ஆதீனம் கார்பார்
ஸ்ரீலஸ்ரீ வைத்தினாத தம்பிரானவர்கள் பேருதவியாலும்
மனுதபஞ்சேர் கிராமத்தார்கள் பேருதவியாலும்;
அச்சிடப்பட்டு,

௸ திருவாவடுதுறை ஆதீனம்
மாட்சிமை தங்கிய மகா சந்நிதானம்
**ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணதேசிக ஸ்வாமிகட்கு**
அர்ப்பணஞ்செய்யப்பட்டது.

முதற் பதிப்பு காப்பிகள் 1000.

கும்பகோணம் லெக்ஷ்மிவிலாஸ பிரஸில் பதிப்பிக்கப்பட்டது,

காப்பிரைட் ரிஜிஸ்டர்
1916

இதன்விலை] [அணா 3

4-87
---
894·1535

தமிழ்நாடு ஆவணக் காப்பக நிலையம்
18365
சென்னை

# முகவுரை

பரவைசூழ்ந்த விப்படியிலேஎந்நாட்டினுஞ் சீர்த்திவாய்ந்த சோழநாட்டின்கணுள்ள வநேகதலங்களுட் சிறந்தும் தலம் மூர்த்தி தீர்த்தங்களிற் பிரகாசித்துஞ் சைவசமைய வாச்சிரியர்களாலும், அநேகக தமிழ்த்தலைமைபுலமையோர்களாலும், நன்குபாடப்பட்டதும், நாட்டமெட்டுடையோன் முதலான ஆழிக்கடவுளாற் பூசிக்கப்பட்டதும், ஸ்ரீகைலாய பரம்பரைதிருவாவடுதுறை மகாவாதீனத்தைச்சேர்ந்ததும், திருலோகமும புகழ்வதற்கரிதானதுமான இத்திருவீழிமிழலையின் தலப்புராணம் தென்மொழியிலில்லாதக் குறையை நீக்குமாறும், நிலைப்பெற்ற புகழ்தாங்கிய மனுச்சக்கிரவர்த்தியின் காதை, அறியாதார் நன்கு அறியவும் இவணுற் நடாத்தப்பட்ட மகாதிகள் முதலான விழாய்க்கள்நன்கு நடைபெறவும் இத்தலத்தின் அரிய பெரியத்திருவிளையாட்டுகளை எல்லோர்களும்நன்கு அறியவுந் தெளிவான வசனநடையிலெழுதித்தரவேண்டுமென்று பஞ்சஇலக்கண விளக்கவாசிரியரும் பாரதிதாஸனுமான தமிழ் வித்துவான் கடகம் கோட்டூர் போர்டு ஸ்கூல் ஆக்டிங்ஹெட் மாஸ்டர் V. சோமசுந்தரஉடையார், அவர்களைக் கேட்டுக்கொண்டோம் அவர் எங்களுடைய வேண்டுகோளின்படியே வடமொழிக்கருத்தை ஆங்காங்கு விரித்து பற்பலவிடங்களிற்பொருட்சுவை சொற்சுவைத்தோன்ற இலக்கணங் குறையாது எழுதித்தந்தனர் அஃதை யாங்கள் ஷை திருவாவடுதுறையாதீனம் மாட்சிமைதங்கிய மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணதேசிகஸ்வாமிகள் திருவருட் பெருங்கருணைக்கிடாக அவர்கட்கு அர்ப்பணஞ்செய்து ஷை யாதீனம் கார்பார் ஸ்ரீலஸ்ரீ வைத்திஞதத்தம்பிரானவர்கள்மாயவரந்தாலூகா கடகம், ஆத்தூர்ஸ்ரீமாந் S. குமாரசாமிஉடையார் அவர்கள் நன்னிலந்தாலூகா வடமட்டம் ஸ்ரீமாந் S. திருவேங்கடம்பிள்ளையவர்கள் ஷை தாலூகா அண்டர்பந்தி ஸ்ரீமாந் விருத்தாசல பண்டாரம் அவர்கள் ஷையூர் ஸ்ரீமான் வேலுபண்டாரம் அவர்கள் ஷையூர் ஸ்ரீலஸ்ரீ A. சாமிநாத தேசிகரவர்கள் இவர்களுடையபேருதவியாலும் வெளியிடப்பட்டது.

இப்படிக்கு,

☞ சி. கைலாயபண்டாரம்

ஏஜண்டு

அண்டர்பந்தி

உ

மகாகணபதிதுணை.

கடற் சூழ்ந்த பூவுலகதிற் சிறப்புற்றோங்குஞ் சிவதலங்களுட் சிறந்து விளங்குகின்ற வெள்ளியங்கிரியன்மிசை எழுந்தருளியிருக்கின்ற ஒப்பற்ற எம்பெருமானான சிவபெருமானை இடைவிடாது பூசித்துய்யுஞ் சூதமாமுனிவர் தவக்கடலுளாழ்ந்து ஞானக்கடலுள்படியும் நைம்சார்ண்ய வனத்திற்கு எழுந்தருளினார். அவர்வருகையைக்கண்ணுற்ற நைம்சார்ண்ய முனிவர்கள் ஆங்கே எழுந்து எதிர்சென்று சோடச. உபசாரங்கட்செய்து முகமன் சொற்றி அழைத்து தர்ப்பாசனமளித்து இங்கெழுகப்பெற்றது யாம் செய்ததவமே யென்று வியந்து பொருளல்லோமையேயொரு பொருளாக மதித்து இவணெழுகப் பெற்றது யாதோவறியேம் என்றறைந்து சூதமாமுனிவரை நோக்கி முனிவர்கட்கரசே யாம் திருபுராதிகளையெரித்து நீறாகச்செய்த உமாமகேஸ்வரனுடைய சரிதைகளனைத்தும் நின்பால் பன்முறை செவியுற்று மகிழ்ந்திருக்கின்றோம்.

பதினான்குலகம் இருநூற்றிருபத்து நான்கு புவனம், ஆயிரத்தெட்டு வண்டங்கள் முதலானவிடங்களினுமுள்ள தேவர்களானும் யேனைய முனிவர்களானும் புகழ்வதற்கரிதான பெருமைவாய்ந்ததேஜினீவன மென்னுந்தெய்வத்தன்மை பொருந்தியத்திருவீழிமிழலையின் சரிதமும் அதன் கிளையங்கக்ஷேத்திரத்திங்களினொன்றான மனுதபஞ்சேர் தலத்தின் காதையும் அத்திருவிழிமிழலைக்கிறைவனான நேத்ரார்ப்பணேச்சுரனுடையவத்திருவிளையாட்டுகளையுஞ் சில, அடியேங்கள் கேட்டுய்யுமாறு திருவாய்மலர்ந்தருளவேண்டு

மென்று கேட்டும் நைம்சாரண்ய முனிவர் குழாங்களை நோக்கி ஹே!முனிசிரேஷ்டர்காள் அத்திருவீழிமிழலைக்கு நாதனுன உமா நாயகன்றிருவிளை யாடல்களையுரைப்பதற்கு யாமுமறியோமாயி னுமாயிரத்தெட்டண்டங்களையு மேகசக்ராதிபதியாய்த்தனியர ழியுருட்டிச்செங்கோன் நடாத்தியசூரபது மன்சிங்கமுகாசூரன் முதலான மகாகொடிய நிருதர்களையும் நீறுசெய்தவேற்கடவுள் தென்றமிழ் முனிக்குறைக்குங்கால் யாமருகிருந்துக் கேட்டிருக்கின்றனம். அஃதை யாமியன்றமாட்டு நிங்கட்குரைக்கின்ருேம் கேண்மின்கள்.

முன் ஒரு காலத்திற் பன்னுயிரங்கோடி கிரணங்கள் விரிய சப்தமாபுரவி பூட்டியதேரினின்றுஞ் செங்கோற்செலுத்துஞ் சூரியனுடைய மரபிற்ருேன்றிய மனுவென்னுமோரரையனுளன். அவன் நீதி சத்தியம் பொறை அருள், அடக்கம், ஈகை, இவைகளிற்றனக்கு. நிகரற்றவன். சங்கநிதி பதுமநிதி பஞ்சதரு முதலானவைகளும் நாணும்படியான கையையுடையவன். இத்தன்மையுள்ள வேந்தன் வேதம்வழாது ஆணைச்செலுத்தி வருநாளிற் ருன் கடற்சூழ்ந்த இவ்வுலகத்தை முற்றுந்தனிச்செங்கோன் நடாத்தி அறத்தைப்பரப்பி வேதம் விளம்பும் விதியை விரித்து தீயோரைத்தீய்த்துத் தக்கோர்கட்கேன்றசெய்து தனித்தராதலாதிபதியென்னுந் திருநாமம்பெற்று. நீண்டவாயுளையுஞ் சீர்த்தியையும் பெறவேண்டுமென்று திருவுளங்கொண்டு தன்குருவான வசிட்ட முனி முதலான வமைச்சர்களோடு,வாலோசித்து இதற்குவிரிந்த தவமன்றி பிறிதொன்றுந் தராதென்றுன்னி அதற்குவேண்டிய காரியங்களாங்கேவமைத்து தன் மனையாட்டியாரோடு தவஞ் செய்வதற்கு மகாமேருகிரிசாரலைநண்ணிபுண்ணியதீர்த்தங்களிற் படிந்து, வற்கலைபுனைந்து, சடைமகுடந்தரித்து நீற்றினுல் மேனிமூடி, நான்மறையும் புகலற்கரிய பிர்மதியானத்தையுன்னி, ஆயிரத்தெட்டடி நீண்டகம்பத்தை செவ்வையுறநிறுத்தி, அதன்மேலொருதாளால் நின்று நின்ற தாளின்ருெடைமேல் மற்ருெரு காலைமடித்து மனமடக்கி,விண்ணிற்குநாட்களையுங் கோட்களையுங்

கவர்வான்போல் பாணிகளை நீட்டி ஆசனம், பிராணயாமம், பிரத்தியாகாரம் தாரணை தியானம் சமாதி முதலான அஷ்டாங்கயோகத்தினும், முறையே பிராணபாமத்தில் வாயுங்கண்களுமூடி, ஐம்புலனும் நெறியேச்செலுத்தி நானுனியையுண்ணாக்கினேற்றி மடித்து பூரகம் கும்பகம் இரேசகம் முதற்மூன்னறயு முறைப்படி அடக்கிம் விடுத்தும் வாங்கியும் பிரத்தியாகாரம் பயின்றுந்தலை கீழுந்தாள்மேல் நின்றும் வாயினுமூக்கினுங் கரங்குவித்து உண்ணாத்துவாரத்திற் நன்றுவேற்றி தாரணையுந்தாரணையின்காலமான பூதாரணை, சலதாரணை, அழற்றாரணை, வாயுதாரணைகளையுந் தியானமுமதன் பாகமாகிய சகுணம், நிற்குணங்களினும், மாமுத்திரைநபோமுத்திரை தியானமுத்திரை, சலந்தரமுத்திரை, மூலபெந்த முத்திரை, முதலான சமாதியினும் பயின்றுயோகத்தினிலையையோகத்திறையாகிய மலைமகள்பாகனானசிவபெருமானுங்காண்டு களிக்கும்படியாக பதினாயிரவருடம் மகாக்கொடிய தவஞ்செய்தான். இக்கொடிய தவாக்கினியானது, புவலோகம், சுவலோகம், தவலோகம், மகாலோகம் சத்யலோக முதலான, உலகங்களையுந்தகிக்கவாரம்பித்தது, அப்போது ஞானபுத்தகமும் படிகமாலையும், கமண்டலமும், வீணையுந்தறித்த எம்மன்னையாரான. பாரதியானவள் கேள்வனைப்பணிந்து எனது ஆருயிர்தலைவ இங்ஙனம் யாம் படிந்தாடுங்கமல பதுமமும் பழுதாகுது எம் உய்யானமுமுலர்குது மேனிகாய்குது யாதோவாட்டுது பார்மின் என ஒன்று மறியாதனள்போல பக்தர்கள் நாவில் பரவிநின்று என்றும் அழியாப்புகழை நல்குமெமன்னையாரான பழைமறைச்செல்வி பணிந்து நின்று வினவினாள்.

அப்போது மான்மகத்தேவு நகைத்து ஹே! நற்பாமடந்தை நீயறியாயென்பது நாம் அறிவோம். நீ என்னோடு பரிதல் செய்கின்றனை நின்னாலுணர்க்க் கூடாத்தையாம் யெப்படி உணர்கக்கூடும். மாகந்தமு மகரந்தமுஞ்சூடு மளகத்தினையுடையவைந்தினை மானே நின்றிருவருட் பெருங்கருணையாலன்றோ வேதமுய்குது. அமுதமேந்திய கலசத்தையொத்தத் தனத்தையும் பசண்வ

பையெ த்த விழுமையயுமுடைய ஹே! மதுசெறி கூந்தலையுடைய பெண்மணே கேளீ ?

சத்தியத்திற் சிறந்த சீர்த்தியையுடைய மனுவென்னுமோர் அரசன் நம்பால் நோக்கி அரியபெரிய தவஞ்செய்கின்றான் அஃதே இஃதாகும் ஆகையான்பாம் ஆங்கு எழுந்தருள்வோமென்றுதம்பெருமாட்டியாரோடு அன்னவாகன சமேதராய் பிரசன்னமாகக் கண்டு மனுவானவன் தவத்திநின்றெழுந்து ஆனந்த பரவசத்தனாபிருவரையுந் தோத்திரங்கட் செய்தான். அப்போது பிர்மாவானவர் மகிழ்ந்து நினக்குவேண்டியதியாது கேண்மின் என ஸ்வாமி அடியேன் விரும்புவது யாதோ அஃது அனைத்தும் நீ வறிந்ததன்றோ சிற்றறிவுடையேனை வினவுவது யாதுவென்று பணிந்தான்.

அப்போது எம்மன்னையார் மனுவின்பால் மகிழ்ந்து ஹே! பாலா பூதலமுற்றும் முற்றும் புரக்கவும் ஆரணம வகுக்கவும் அன்ன நீதி நின்னுற்சொல்லவும் நின்வழிநீருமட்டுநிற்கவுஞ் செந்திருமகள் நினைவிட்டு நீங்காதோங்கவும் பூதலம் உளநாள் நின்புகழ் நிற்கவுந்திருமூர்த்தி முதலான தேவர்களும் நின் அத்தாணியின் மிசையுற்று நின்னுற்றுங்குஞ் செங்கோலைதாங்க அவாக்கொள்ளும்படியானச் செங்கோலையுமதற்குத்தக்க வாயுளையுந் தந்தோம் ஏகசக்ராதி பத்யத்தையுமளித்தேம். கொஞ்சமுமஞ்சாய், உரைகுன்றாய், சப்தமேகமும் நின் தானத்திற்கஞ்சம், இந்திரன் முதலானதிக்கு பாலர்களும் நின் புகழிற்கு, நாணுவர்.

ஹே மனுவே ஏகசக்கபாதிபதியாய் தனிபாழியுருட்டி செங்கோன் நடாத்துதற்கு நினக்குயின்னும் தவக்குறையுளது. ஆயினும் நீ, பரியாகமும், விசுவசித்து மகமுஞ்செய்து முடித்தியேல், நினக்கு சர்வ ஏகாதிபத்யமுங்கிடைக்கும் இன்புற்று வாழ்வை, என திருவுளம் பற்றுக்கேட்டுமகிழ்ந்து பதுமகேள்வனை நோக்கி ஸ்வாமி அஃது செய்யத்தக்க புண்யபூமியாது, அஃது, எவ்வண்ணமுரைமின் என்றுபணிய, சதுமுர்கத்தேவு, உகந்து ஹே மனு

ஈரேழு உலகங்களினு மிருநூற்றிருபத்துநான்கு புவனங்களினு மாயிரத்தெட்டண்டங்களினு மற்றெவ்வுலகங்களினு மிதற்கீடானத்தெய்வத்தன்மையுள்ள தலமறியோம் இஃதில் யாமும் விட்ணுருத்ராதி தேவர்களுமாங்கே சதாவுரைவோம் முப்பத்து முக்கோடி தேவர்கள் முதலான ஏனையோர்களு மஷ்டதிக்கு பாலர்களுமவரவர் பதிகளுமிகழ்ந்து இங்குரைந்து சதா பாசுபத படையோனான சிவபெருமானை தெரிசனஞ்செய்து அவரவர்களிருவினைப்பயனையு மறுக்கின்றனர்கள்.

பண்டைநாட்சேடனுக்குஞ் சமீரணனுக்கும் போர்துடங்கியகால் சமீரணனால் இமோத்கிரியின் கொடிமுடிகளை யறுத்துபல திசைகளினும் வீழ்த்தியகாலத்து உமாமகேஸ்பரனுடைய மங்கலக்கொடிமுடி சிதைந்து இங்ஙனம் வீழ்ந்தது அப்போது யானுமரி முதலான இந்திராதிதிக்குதேவர்களுமஞ்சி யம்மங்கலக் கொடிமுடியைச் சூழ்ந்து யாது செய்வதென்றுணராது கவலையுண்மாழ்கிக்கிடக்கின்ற காலத்து பணிமுனியும் புலிமுனியும் பணிந்துப்போற்றுங் கெங்கைவேணியம்பெருமான்வயிரம் வைடூரியம், கோமேதகம், தரளம், முதலான நவரத்தினங்களானுங் குயிற்றுபம் பொன்னாற்செய்து அரிகளாற்றாங்கு மத்தாணிமிசை சர்வலோகயேகநாயகனாகியவெம்சிவபெருமான்எழுந்தருளி விண்ணினின்று மாயிரங்கோடி சூரியர்களு மொளிகுன்றும்படியாகப் பொலிந்து பர்வதராஜன் புத்திரியாகிய பார்பதி சமேதராய் திருமங்கலக்கோலத்தோடு தேவர்கள் பூமழைபொழிய முனிவர்கள் ஜெய ஜெயவென இங்ஙனந்தோன்றி ஹே விண்ணாட்டர்காள் யாம் இங்கு எக்காலத்தும் உரைவோம் ஆகையான் நீவீர்கள் எம்பால் காத்திருக்கக் கடவீர்களென்று கருணாநிதியான தற்பரன் கடைக்கணித்து வதிட்டாதி இந்திரதேவர்களை நோக்கி ஹே! தேவமுனிவர்களே திருமாலையன்றி நீங்கள்யாவரும், இவ்விடம் எனை பூசிப்பது அருமையாகும். ஆகையினான் நமது தேஜனிவனத்துள் வேறுலிங்கங்கள் தாபனஞ்செய்து பூசை செய்தின்கண் அப்பூஜா லிங்கங்களனைத்து நாமேயாகி நம்மை பூசித்ததாகக் கொள்வோம்

என்றுலிங்கசொருபமாகக் கரைந்தருளி வதிட்டாதி புரந்தரதே வர்களுடைய திருக்கரங்களினு மொவ்வொருலிங்கங்களாக பிர காசித்தார். அப்போது யாவருமுவந்து அவரவர்களு மொவ் வொரு விடங்களினும் வைத்து லிங்கதாபனங்கட்செய்து பூசித்து வந்தார்கள் அப்போது வதிட்டன், இதற்கு ஆக்கினே பாகத்தி லிருகடிகை தூரத்திற்றா்பனஞ்செய்து தன் திருநாமங்கொண்ட தடாகமமைத்து முறைவழாது, பூசித்துவந்தான்.

பின் திருமால் இவ்விலிங்க மூர்த்தியையே அநேக தினமாயி ரம் பூக்கொண்டு வாயிரவருடம் பூஜித்த அர்ச்சித்து ஒருநாள் ஒரு பூக்குறைய அதற்குத்தன் நேத்திரத்தையீடாகவர்ப்பணஞ் செய்து அவன் திருவருட்பெற்று சக்ராயுதத்தையு மின்னுமநேக இஷ்டசிததிகளும் பெற்றார். அஃது காரணமாக நேத்ரத்தை யர்ப்பணம் பெற்றுக்கொண்டமையான் நேத்ரார்பண ஈச்சுர னென்னுந் திருநாமத்தைப் பெற்றார்.) தவிர இஃது பூகைலாயம் கல்யாணபுரம் ஆகாயநகரம் பநசார்ண்யம் நேத்ரார்ப்பணபுரம், தேஜினிவனம் சுவேதகானனம் தெட்சணகாசி என்னுந்திருநா மங்கட்பெறும் பாற்க ற்றயின்றேனுன பஞ்சாயுதனுவன் இன் னுமி யாதோபெறுவதற்குன்னி இத்தலமூர்த்தியான அம்பகமூர்த் தியை இன்று காருமின்னும் பூசித்துவருகின்றுன். இத்தன்மை வாய்ந்த அரியதலத்தின் புகழை என்னுற் சொல்லக்கூடுமோ ஹே மனு இத்தேஜனீவன மென்னுந் திருவீழிமிழலையை ஓர் தரம் நினைப்பினுமலது பார்க்கினுஞ்சகலபாப விமோசனமாகி எ ண்ணிறந்தகோடியுகம் இன்பத்தைப் பெறுவான் இத்தலத்தீர்த்த த்திற்படிந்து ஒருநாள் விரதமுற்று இம்மூர்த்திக்கு அர்ச்சனைகள் செய்யின் அவனே பூமண்டலாதிபதி யாவதோடு ஞானதேஜ ஸும், கல்விதேஜஸும், மிகப்பெற்று அழியாப்பரகதியுமெய்து வான் தலவிசேடம் மூர்த்திவிசேடந் தீர்த்தவிசேடமிம்மூன்றி னுமிதற்கீடானத் திருத்தல மூவுலகமுதலான வெவ்வுலகங்களினு மில்லை என்று முன்னுமேசொல்லியிருக்கின்றேம்.

ஆகையால் நீ மங்கலக்கொடிமுடியையுடைய இத்திருவீழி மிழலை யணைந்து அசுவயாகமும் விசுவஜித்துயாகமுஞ் செய்தி அப்போது ஹரிஹரனுடைய திருவருட்பிரகாசமுண்டாய் சர்வ லோக ஏகாதிபத்யமும் பெற்று அநேக கோடிகாலம் ஆணைச்செலுத்தி இறுதி அழியாமோட்சமெய்துவை இவ்வியாகம் தொடங்குமுன் இத்தலமான பசார்ண்யத் திறையாகிய பசுபதியினுடைய பெருங்கருணையாலிஃது துடங்குங்காலம் நினக்கு நன்குப் புலப்படும் எனத்திருவாய் மலர்ந்து அகிற்புகையூட்டு மளகத் தினையுடைய எம்மன்னையரான ஆரணச்செல்வியோடு அந்தரங் கறைந்தருளினார்.

பின்; மனுவானவன் நேத்ரார்ப்பண வீச்சுரனையே சதா சிந்தையுடையவனாய் சங்கரா சம்புவே, சதாசிவா, நிர்மலா, தற்பரா, ஜம்முகா, கந்தனை ஈன்றகடுக்கையங்கண்ணிசூடிமாரனை வென்ற மங்கையோர்பாகாவென்று பலபலவிதமாய் ஸ்மரித்துக் கொண்டு திருமகளூரையுந் திருவீழிமிழலையை நாடிவழியின்கண் ணுள்ள வநேக தலங்கடோறுந் தெரிசித்துக்கொண்ட திருவீழி மிழலைக் கண்ணுற்று ஆனந்தக்கடலுள் மூழ்கி ஆங்குள்ள புண்ய தீர்த்தமாடி வேதவிதி வழாது நாற்பத்தைந்துநாளாலயம் ஈறை நூறெட்டு வலம் வந்து மாமுலைப்பிராட்டி சமேதரான கல்யாண புரத்தரசை அர்ச்சிதுத் தோத்திரஞ்செய்து திருவீழிமிழலைச் செல்வமே அரிஅயன் முதலான விந்திராதிதேவர்களையுந் தனக்கு சிற்றேவற்செய்யும் படியாகக்கொண்ட தேவதேவே அடியேன் மகம்புரிய மனமுற்றேன் அஃதை முட்டின்றி முடித்தன் நின் கடமையாகுமென்று வேண்டி உண்டி முதலான யாவையும் நீற்று. சந்நிதானத்தின் முன் பன்னாட், கிடந்தான்.

அப்போது மங்கலக்கொடியையுடய வெம்பெருமான் மகிழ்ந்து விண்ணின்று ஹே மனு யாதொன்றுக்கும் ஐயுறல் வேண்டாம். நீ விரும்பிய மகம் இனிதுயெய்தும்நமதுதேஜனிவனங் கீழ்பானி ருகடிகைச்சென்று பாமளிக்குமெம் . லிங்கத்ன் தவைத்து

பூசித்து இருமதிதாரணை யோகஞ்செய்து அப்பால் பரிமகம் விய
ற்றியபின் விசுவஜித்து யாகமுஞ்செய்வை நாம் அப்பால் நீ விரு
ம்பிய தெய்து வண்ணஞ்செய்வோமென்று வசரீராக உரைக்கக்
கேட்டுவெழுந்து வானந்தக்கடலுள் முழ்கி ஸ்வாமி நின்பெருங்
கருணைக்கு பாத்ரம் யான் ஆவனேயென்று தொழுது மெய்யுலர்
ந்து பஞ்சேந்திரியமுமடங்கி படியில் விழுந்து பின்றேறி எழுந்து
தன்கரதலத்திற்றுலங்குஞ் சிவலிங்கத்தைதக்கண்டான்.

கரதலத்திற்செவ்வையேந்தினன். சென்னியினும் விசாலம்
பொருந்திய மார்பினுங் கண்ணினுமொத்தினன். மேனி வீங்கி
னன், ஆனந்தக்கண்ணீரால் அபிடேகம்செய்து அன்பென்னுமல
ரான் மாலைவேய்ந்து ஞானமென்னுந்தீங்கனியையூட்டி தானுமரு
த்திமண்ணுற பணிந்து விடைதருதி என்று பெற்றினிது நடந்து
இருகடிகைக்கடந்து, தானுய்யும் விடமிதுதான் என்று மதி
த்து, விடையோனீந்த' விலிங்கத்திற்கு தான்றிருநாமந்தரித்து
(அஃதாவது மனு லிங்கம்) இதற்கு கோயிற் சமைத்து, விதிவில
காது பூசித்து,இருமதி தாரணை கடந்து, இதற்கு மனுதபஞ்சேசர்
என்னும் பெயர்ச்சூட்டி திருவீழிமிழலையும் நேத்ரார்ப்பண ஈச்
சுரனும் நீயே என்று தொழுது யாகம்செய்யத்தொடங்கி இதற்
குறிய யாவையுமமைத்து ஓமகுண்டமண்டபம், தேவர்கோமா
னுடைய அமரர் பதியும், குபேரனுடைய அளகைபதியும், இதற்
கீடாகாதென்றுறைக்கும்படி வமைத்து அதனுள் யாகக்குழி பாங்
தளங்காணப்பறித்து நாற்றிசையினு மாடகத்தூணிறுத்தி வயி
ரத்தாற், பலகை பரப்பி, கீழ் சந்திரகாந்தற்கற்கள் படுத்தி, அலங்
காரங்கட்செய்து, அதன் வலபால் அருந்ததியும் நாணும்படி
யான தன்மனையாட்டியை வைத்து வதிட்டன் பாதம் சிரமேற்
கொண்டு அம்புலி சூடிய வத்தன்றன் றிருத்தேவியாரோடு யிடம்
வலமாக மாறி இருந்ததை யொப்பாகும்படியாகத் தான் வீற்று
யாகஞ்செய்யத்தொடங்கி மூத்தத்தேவை முழுமையுந்தொழுது
முத்தீயும் வளர்க்க வதிலிருந்து உண்டாகின்ற புகையானது
ஆகாயத்தை மேற் போர்வையாகப் போர்த்ததுபோலிருந்தது.

மேலும் அச்செந்தீயானது. புகையைமேற்போர்வையாகப்போர்த்தது போலும் பசுமையுடைய கடலிலே நீரைப்பருகும், மேகம் ஆதவனே, மறைத்தது போலுமிருந்தது, அப்போது மனுவானவன் நெய்யை சுருவையால் முகந்து சப்தபுயல்களு மொன்று சேர்ந்து பொழிவதுபோற் சுருதியின் பிரகாரம் ஓமகுண்டம் பெய்தான்.

கற்றுங் கேட்டுமுணர்ந்த முனிவர் கூட்டங்களும் அழிவில்லாத மலரோன் முதலானத்தேவர்களுஞ் சூழும்படியாக முத்தீயுமோங்க வேழுநாள் ஓமஞ்செய்து யாகம் முடித்து நான் மறை முகலும் வண்ணம் இமையோர்கட்கெல்லாம் அரும்பெருந்தேவருணவை நல்கி மும்முறை வலம் வந்து தாழ்ந்து தேவர்கட்கு விடையளித்து மன்னர்களானும் ஏனையோர்களானுமிடுந்திறையனைத்தும் மறையோர்கட்கும் ஏனைய அதிதிகட்கும் வெறுக்கும்படியாக வளித்து இமோத்கிரி பருவதத்தின்று அயனுர்செய்த யாகத்தினுந் தானத்தினு மாணப்பெரிதோ என்று ஐயப்படும்படி யாகம் முடித்து மற்றும்பல வந்தணர்கட்கு தாம் யாகஞ்செய்தவிடத்து கிரகங்களமைத்து தானஞ் செயவேண்டுமென உளங்கொண்டு உம்பர்கோனும்புகழற்கரியதெய்வச்சிற்பிகளால் மழை மண்டலங்கடந்து மதிமண்டலந்தொடும்படியாகச் சதமாடங்களமைத்து ஒவ்வொருமாடங்களினும், ஒவ்வொரு அந்தணர் தம்பதிகளை நிறுவி குழவிமதியுனையும் குன்றவில்லானுன நேத்ரார்ப்பணேச்சுரன் திருவாணையால் இரண்டு அந்தணர்களீட்டுவது முற்றும் அரிதாயிற்று.

அப்போது மனுவானவன் கடற்சூழ்ந்த உலகம் முதலான மும்மையுலகத்தினுந் தேடி இந்திரன் முதலான திக்குப் பாலர்களிடத்தும் பணிந்து வேண்டினுன்.

அப்போது அவர்களும் ஆங்காங்கு தேடியும். எய்தாமற்போகவே அப்போதும் மனுமனந்தளராது சத்பலோகத்திறையாகிய மலரோனடி பணிந்து யாகம் நடாத்தியதும் அந்தணர் வரித்ததும்

அஃது அரிதானதும் அறைந்தான். அப்போது சதுர்முகத்தேவு நகைத்து நீ கொஞ்சமும் மனந்தளராதை நினக்கு கல்யாணபுர மென்னுந்திருவீழிமிழலையின் மாண்புமத்தலத்திறைய ாகிய தேமற்படர்ந்த ஸ்தனபாரங்களையும் மீன்போன்றவிழிகளையுமு டைய மாமுலை வல்லிச்சமேதரான ஸ்ரீநேத்ரார்ப்பண வீச்சுர னின் பெருமையும் நினக்கு சொன்னேம். அத்தன்மையொத்தத் தெய்வத்தேவு நின்பாங்கே நினக்குத்துணையாக நிற்க அஃதை யுணராது இங்கு வருவது என்னே. நீ சீக்கிரம் அப்பதிக்கேகு. அவனருள் உண்டாகுவண்ணஞ் செய்தி யென்றுரைத்து விடை யளித்தான்:

உடனே மனு தாம் மகம் செய்த விடம்புக்கி [அஃதாவது மனுதபஞ்சேர்] அரியவிரதங்கொண்டான். ஹே! நைம்சார்ண்ய முனிவர்களே இவன் தழுவிய விரதம் யாவர் தழுவினர், இஃதை விளக்கத்தக்கவன் யாரோ. ஆனாலும் ஒருவாறு சொல்கின்றோம் கேளீர்கள் உண்ணத்தக்க ஆகாராதிகளையும் ஜலத்தையும் நீத் தான் நித்திரைமறுத்தான் நித்யகருமங்களைத்துறந்தான் இமையை யொட்டினன். ஆக்கைகிடத்தினன் வெயிலும் பனியும் ஒன்றென மதித்தான். கண்ணுதற்பொருளைக்கருத்துளிருத்தினன் அந்தணரி ருவரருகினலன்றி இவ்விரதத்தினின்றும் அகலேன் என்று அறைந்தான் ஓ சிவமே சிவமே என்று வாய்விட்டலறி நீலோற் பலம் போன்ற விழியையு மின்னற்போன்ற இடையையுமுடைய மாமுலைப்பிராட்டிமகிழும் நாதா தெண்ணிலாமதிசூடும் திருவீழி மிழலைச்செல்வமே தேவர்கள்போற்றுந்தேவதேவே. ஞானக்கட லின் ஞானமே யோதத்தினுறைமெய பேரின்ப வாரியே என் குல தெய்வமே தேஜினிவனத்திருவேயறியாததொன்றுளதோ தெய்வவந்தணர்களை மும்மையுலகத்தினுந் தேடினேம் நின்கூட் கியால் ஆங்காங்குமில்லைநின்கருணை நோக்கின்றி வரிப்பது எங்ஙனம் கல்யாணக்கொடியையுடையகாலகாலனை உந்தி பூத் தோர்க்கு நேமியளித்த வள்ளலே என்று பலபலவிதவிதமாய்ப் பாடி நவநாள்வரை பட்டினியுற்று மெய்வாடி மனமுநாவுமுளர்ந்து

ஐம்புலனுஞ் சுழன்றடங்கி வாதநாடியும் பித்தநாடியுங்குறைந்து சக்தியற்ற வலமந்தனுய் மரணக்குறியடைந்ததுபோல மூர்ச்சித்து அவனிமேன் வீழுந்துகிடந்தான்.

கேளும் நைம்சாரண்ய முனிவர்களே இஃது இப்படியிருக்க திருவீழிமிழற்கரசனும் பிறையணிச்சடையனுமான உமாநாயகன் சந்திரகாந்தக்கற்கள் பரப்பி

Q2;38·21192 ΓR N16

ஆடகச்சுவர் நிறுத்தி பவளத்தூண் நட்டு பற்பராகம் வைரங்களாற் பலகைமேற் பரப்பி மரகதத்தினல் உத்திரங்கள் அமைத்து நித்திலங்களாற் பந்தர் சமைத்து சீரரிதாங்கிய இரத்தினமணி அத்தாணியிற் வெண்பட்டார் மெத்தைகளமைத்த பீடமீசை முப்பத்துமுக்கோடிதேவர்களும்பட்டவர்த்தனரும் மகுடவர்த்தனரும் ஏனைய தவமுனிவர்களும் புடைசூழ்ந்து அடிபணிந்து நிற்கவும், கற்பக நிழலோன் கற்கள் பொதித்த காளாஞ்சி கொண்டொருபால் நிற்பச்சந்தனகளபகஸ்தூரிவாசனுதிகள் ஏந்தி ஈசானன் மற்றொருபால் நிற்ப பவனன் ஆலவட்டந்தாங்கி ஒருபால்நின்றுவீசவும் அனற்றேவு தீபதூபாதிகள் தாங்கிஇன்னொருபால் நிற்ப புனற்றேவு பனிநீரிறைப்ப நிருதி அட்டமங்கலந் தாங்கி மற்றொருபால் நிற்ப நிதித்தேவு இன்னொருபால் நின்று இரத்தினபரணங்கள் எடுத்து நிற்ப தென்றிசைப் புத்தள் சந்நிதானத்தின்முன்னின்றுகாஞ்சுகவினை செய்யவுமாதிசேடன் முதலான அட்டநாகங்களும்மணிவிளக்கேந்திநிற்கவும்வேதநாயகனுன பிர்மா பாதுகைப்பற்றவும் விண்மளிர் முதலான உரகமாதர்களும் முனின்று பரதநாட்டியஞ் செய்யவும் நாரதாதி கிம்புருடர்கள் வீணையான் சாமவேத கீதங்கள் பாடவும் மலைமகளும்புனல் மகளும் புன்சிரிப்புடன் பாங்கே பொலிவுடன் இயங்கவும் ஆடகனைக் கிழித்த ஆண்டகையான ஸ்ரீமந்நாராயணமூர்த்தி தன்னுடன் மகிழ்வுற்றியங்கவும் கணபதியும் கந்தவேளும் தந்தை பின்நிற்கவும் சர்வலோகரட்சகனுன ஸ்ரீ நேத்ரார்ப்பண ஈச்சுரனுனவர் பல்லாயிரங்கோடி சூரியர்களுக்குங்கோட்களுக்கும் மத்தியில் பூரண மதியைப்போற் பிரகாசித்து விளங்கினர். அப்போது கணபதி

தமிழ் ... நூலகம்
183652

முதற்கந்தக்கடவுளும் வீரபத்ரத்தேவும் வாய்வைத் துண்ணுத அமுதமேந்திய தனபாரங்களையும் சிருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரம் திரோபவம் அநுக்கிரகம் முதலானபஞ்சகிருத்தியங்களையு முடைய எம்மன்னையான சுந்தரகுசாம்பிகையான எம்பெருமாட்டி மகிழ்ந்து தம்நாயகனைப்பார்த்து யாம் தேவு யாம் தேவு என்றிருக்கின்ற எல்லாவுலகு தேவர்கட்கும் தேவே பாற்கடலிடத் துண்டாகிய படுங்கடுவெண்ணையை திருமிடற்றடக்கிய தெய்வமணியே என்றும் அடங்கலுமடக்கிடுங் கொடுங்கோலை எமனை காலாலடக்கிய கடவுளே யென்றுந்தொழுது படிந்து ஒதுங்கி நின்று ஸ்வாமியை நோக்கிப்புகலும்.

ஸ்வாமி நமது பக்தனுன மனு நம்பால் கொடியவிரத முற்று நமது தேஜனீவனத்துள் மரணக்குறி யடைந்திருக்கின்ருன், அடிகள் திருவுளஞ்சிறிதுமறியேன் தாமதஞ்செய்தல் நின் சீர்த்திக்கு மாசன்ரே. நமது பக்தகோடிகளுள் மனுவைப்போற்றவவிரத மெய்தவர்கள்யாவர்என்று வேதமுடிமேல் நின்று விளையாடு மெம்மன்னையாரான சுந்தாகுசாம்பிகை பெருமாட்டியார் சிறிது முருவலோடு திருவாய் மலர்ந்தருளினுர்.

அப்போது ஸ்வாமி; கச்சிற்கடங்காத கனதனபாரங்களையுடையக் கட்டியமுதினு மமுதே நின் றிருவுளத்தின்படியே கடிதினிற் செல்வோம் இன்னங் கொஞ்சம் பொறுத்தி என புகன்று திருமாலை நோக்கி ஹே மைத்துன. நமது பக்தகோடிகள் ஒருவனுன மனு நமது தேஜினிவனம் ஆக்கினி பாகத்துள் கடுவிரதமுற்று அலமந்து கிடக்கின்ருன் நாம் நமது கணுதிகளை முன்னமே விடுத்து அவனுல் நல்கும் கிரகதானுதிகளை பெறும்படியாகக் கட்டளையிட்டிருக்கின்ரும். ஆகையான் நாம் அவ்விடஞ்சென்று கிரகதானுதிகளை மிகப்பெறவேண்டும். நீயுமந்தணராகுமின் என்று நந்தியம் பெருமானை நோக்கி நமது தேவதுழாங்களுடன் கணுதிகளாகுவை யென்றுக்கடைக்கணித்து

புயல் வாகனன் முதலான திக்குப் பாலகர்கள் திடுக்கிட்டவும் பருதிதேவுமதிதேவு ஒளி குன்றவும் மாரன் மய

ங்கவும் பார்பதி மகிழவும் எண்ணான்கு இலக்கணங்களோடும் அறுநான்கு காளைபருவத்தோடும் திருபுண்டரம் நெற்றிநுதற் மூடவும் இரவிகுன்றும்படியான இரத்தினங்கள் குயிற்றிய கண்டிகை குண்டலங்கள் தரித்து செம்பட்டுடுத்தி நித்திலங்கள் கோத்த முப்புரிநூல் துலங்க சாம்பு நதமிடையிடைக்கோத்த ருத்ராட்சம் வணிந்து பொற்சிலம்புகள்பூட்டி காசற்ற கற்கள் பொதித்த பத்துவிரற்களிலும் பௌத்ரங்கட்கட்டி ஞனபோதகம் இடக்கையேந்தி சிறிது புன்நகையோடு இடைபாகத்துய்யுந் தன்றிருத்தேவியார் சண்முகத்தேவை யிளகுழவியாக கரத்திலேந்தி ஐங்கரத்தேவை ஐம்பிராயக்குழவியாய் மலர் கரம்பற்றி மகிழ்ந்து பின்றொடர வெளிவந்து நின்றான்.

அப்போது பதுமைநாயகனும் நீலகாளமேகமானது அநேக கமலம் பூத்து மண்ணுற்று வந்தபோலும் நானன்கு காளைபருவமுங் கறுத்த மேனியும், சங்குசக்ரரேகையும் துலங்க பிரபந்தமிரட்ட ஆயிரங்கோடி மாரவேள் ஒன்று சேர்ந்துற்றாலும்இவன் வனப்புக்கீடாகமாட்டார்களென்று றுரைக்கும்படியான இலக்கணமும் பொருந்த ஆக்கத்தேவி தன் மதலையை மார்பணைத்து படியுற்று தன் பின் மயிலுங்குயிலும் நடந்துவருவபோல் நடந்துவர வெளிவந்து நின்று ஹே பிர்மாதிஹிந்ரதேவர்காள் நமது தேஜினிவன பஞ்சக்ஷேத்திரங்களிலொன்றான வதிட்டபுரி என்னுமிடத்திற் மனு அரியவிரதமுறுகின்றான். யாம் ஆங்கு செல்வோம் நீவிர் முன்சென்று அதன் வடமேற்பாலுறைவீர்கள் யாம் விரும்புங்கால் ஆங்துவருக்கடவீரகள் என்றுவிடையளித்து நந்தியம்பெருமான் பின்றொடர அரிஅரனுமிருவரும் மனுதபஞ்சேர் இடம்நோக்கிக் பாதஞ் சிவப்படி மிசைநெடிதுநடந்தார்கள்.

செந்தமிழ் கருந்தமிழ் உணர்ந்து மண்ணாசை பெண்ணாசை பொன்னாசை மகவாசை முதலான ஆசைகளும் அற்றயோகத்துள் மூழ்கி ஞானக்கனியையுண்டோர்களுடைய ஞானக்கண்களாலும் பார்ப்பதற்கரிதாகிய ஒப்பற்ற உமைதிருபதிகளிருவரும்

ஊனக்கண்களுடைய ஏனையோர்கட்கும்புலப்படும்படிச்சேவலுங் களினும் நாண நடந்தார்கள் இருவருடைய கமலத்தாள்களும் தன்மேனியைத்தீண்டப் படிமாதேவியானவள் எத்தனை கோடியுகம் தவம்நோற்றனளோ வறியோம்.

இப்படியாக இருவரும் விநோத வார்த்தைகளால் ஒருவரையொருவர் பரிகாசம்செய்துகொண்டு மனுதபஞ்சேரை நோக்கி விரைந்துச்சென்று அங்கு அலமந்துகிடக்கும்மனுவைக்கண்டு ஹே மனு என்றார். அச்சப்தமாகிய அமுதஞ் செவியிற்புகுந்து களையையோட்ட உடனே இமையை விழித்து நோக்கி ஹே ஞானவான்களே சரணம் புண்யசீலர்களே சரணம் என்னை கரையேற்ற வந்த பஞ்சவாசிரியர்களே சரணம் சரணம் என்று தொழுது பன்னீராயிரங்கோடி சூரியன்களும் மாரவேள்களும் ஒன்றுசேர்ந்து பொலிந்தாலும் இவர்களுடைய தேஜசுக்கும் வனப்புக்குமீடாக மாட்டார்களே என்று மதித்து ஆனந்த பரவசத்தனாய் எழுந்து மலரடிவீழ்ந்து இங் கெழுகப்பெற்றது எம்முன்னோர்கட்செய்த தவமே என்று பல்காற்புகழ்ந்து வேதங்க ளுணர்ந்த வேதியர்கட்கரசே நுங்கட்கு என்னொடு நுங்களிருப்பிடமியாது அடிகள் தம் பதிகளோ டிங்கெழுகப்பெற்றது யான் விரும்பிய திங்கெய்துங் காலந் தெய்வத்திருவருளால் மிக்கதுபோலும்.

பாந்தள் தாங்கும் பரவை ஞாலத்து அடிகள்போன்ற தக்கோர்களை வரித்து யாம் மகம் செய்த யாகசாலைமிசை வானுற மாடங்களமைத்து இல்லறம் நடாத்தவேண்டியவை யனைத்தும் அத்துடன் அளித்து நிலைநிறுத்தும் விரதமேற்கொண்டு அவ்வண்ணஞ்செய்து மறையோ ர்கட்கு மனமார்ந்து வளித்தேன் இஃதில் இன்னும் இரண்டு மாடங்கட்கு இரண்டு அந்தணர் தம் பதிகள் தேடி உலகமுற்றுந்தேடி காணாது இந்திரன் முதலான தேவர்களிடத்துங் கேட்டுக்கொண்டேன் அவர்களானுங் கூடாமற்போகமிகவாடி இன்னலுளாழ்ந்து இவ்விரதமேற்கொண்டேன் இஃது ஈடேறும்படியாக பாமலைப்பிராட்டி பாகன் மகிழ்ந்து

வரவிடுத்தனன் இஃதுண்மை யான் நுங்கள்பால்மிக்கமகிழ்ந்தேன் யானும் என் சந்ததிகளும் இவ்வுலகமுமுய்யும்படியாக அடியேன் நல்குந்தானாதிகளையேற்று இவ்விடமே புக்கும்படிவிடையளிக்கவேண்டுகின்றேனென்று சரோருகத்தாளை சரண் அடைந்து அடைக்கலமெனக்கிடந்தான்.

அப்போது திருமகட்கேள்வனை திருமான் நகைத்துதவத்திற்படிந்த மன்னர்சிங்கமே இவர் அடியேற்குமைத்துனன் யான் இவர்க்கு சிற்றேவற் செய்யுஞ்சிறியேன் இவருடைய சீர்த்தியை தேவன் என்னுந்திருநாமஞ்சூட்டிய எத்தேவர்களானு முடியா யாங்கள் அரன் அரிதலங்கடோறும் தெரிசனஞ்செய்துக்கொண்டு வருகின்றோம் இவண் திருவீழிமிழலையானையுங்கண்டு காட்சியெய்தும்படி இங்கு அருகினோம் கலைபாதி புராணவேதாகமங்கள் அனைத்துஞ் செவ்வையாயுணர்வோம் ஞானத்தில் வெகுவல்லோம் நின்னால் யாங்கள் பெறவேண்டுவது யாது நினக்கும் வேண்டிய தீவோம் மற்றெவ்வுலகங்கட்கும் வேண்டுப வேண்டிய மாட்டும் அளிப்போம்.

சர்வபுவனாதியோகபோகஞானாதிகளையுங்கொடுக்கவல்லோம் அத்தன்மைபொத்த எங்கட்கு நீயோ அளிக்கத்தக்கவன் நன்று நன்று, நின்பாபவிமோசன நிமித்தம்கொடுப்ப ஏமாந்தவனென்று எம்மையோ பார்த்தனை நினக்குவேண்டிய வனைத்துங்கேண்மின் இதோவளிக்கின்றோம் கொள்ளுதியென்றான்

அப்போது மனுவானவன் பயந்து சரண்புகுந்து அந்தணர்கட்கரசிர் வானும் வணங்கும்படியான பெரிய திருவுடையோர்கட்கு அளிப்பதில்லையென்றும் நித்திய வறிஞர்கட்களிப்பதென்றும் அடிகள் கூறுவது முறையோ அஃது ஒருவாறு நியாயமெனினும் எஃது கேட்பினு மஃது அளித்தல் எத்தன்மையான கடைமையோ அஃதேபோல் யாவர் எஃதுஅளிப்பினுமஃதை பெறுவதும் அவ்வளவு கடைமையாகும். ஒருபொருள் விரும்பி அஃது யாசித்து அளிப்பவரின்றி உயிர்நீப்பதும் ஒருபொருள் பி

றர்க்களிக்க விரும்பிபெறுவரின்றிஉயிர்துறப்பதுமொன் அவிரும்பி
யதளிக்காது உயிர், துறக்கவிடுபவனும். கொடுப்பதை பெருது
உயிர்துறக்கச்செய்வோனும் மகா பாதகமெய்குவன். ஸ்வாமி
தவிர, இஃதை மறுத்தியேல் யான் உய்யேன் நுங்கள் திருவடியின்
கீழ் எனதுயிர் நீங்கும் இதனால் வரும் பாபம் நுங்களைச்சாரும்
இஃது ஆணை, யான் நிங்கள் அடைக்கலம் ரட்சியின் ரட்சயின்
என்று மலரடி பணிந்து காத்தியென்று வருந்தினான்.

அப்போது கூனல் மதிபுனையுங்கொன்றை வேணியன் பார்
த்து மனுவே நீயோபுகழைவிரும்பியளிக்கின்றனை நீ தபஞ்செய்த
விடத்திற்கு, மனுதபஞ்சேர் என்றும் பூசைசெய்தலிங்கத்திற்கு
மனுநாதவீச்சுரனென்றும், நீ சமைத்துவைத்த மாடங்களையு
டைய வீதிகட்கு மனுபதி அக்கிரஹாரமென்றும் திருநாமஞ்
சூட்டியிருக்கின்றனை, இஃது புகழ்வி ரும்பியன்றோ, ஒன்றைவிரு
ம்பாது அளிப்பதன்றோ தானம் நீயளிப்பதுபுகழ்யென்னுமொரு
பொருளிற்கு ஈடுவன்றோ. ஆகையான் இஃது சித்திபெருமெ
ன்று நினையேம் இத்தானத்தையும் மதியோம் நின்னையுமலட்சி
யஞ்செய்வோமென்று நகைத்தார்.

அப்போது மனு அந்தணர்பாலு அடிகள் யான் புகழிடத்து
அவாவுடையேனென்பது மெய்யே அவாயென்பது அரசர்கட்கு
அருந்துணையன்றோ. அறமும் தவமும் புகழையன்றி எதை
நல்கும் அஃதை வேண்டாமென்றுமறுக்கினுந்தீண்டாதுவிடுமோ
இதைமறுக்கத் திருமூர்த்திகளாலாமோ, உலகத்திலெக்காரியங்
கட்செய்யினு மஃது தருவது புகழன்றோ, இஃதை விரும்பா
தவன் கல்விஞானங்களிற் படியொணாது அறஞ்செய வொண்
ணாது, தவம்புரிய வொண்ணாது, அப்படிக்கு செய்யப்புகின்
அஃது புகழே. ஆகையால் புகழ்விரும்பாதவன் கேவலப்விலங்
காகின்றான் ஸ்வாமி நுண்ணிய நூற்களிற்படிந்து அதன்வழிநின்று
தவமும் அறமுஞ் செய்யப்புகின் அவனையிம்பர் நாடும் உம்பர்
நாடும்புகழும்சத்யலோகம் சதுர்முகனைப்புகழாதூவிட்ணுலோகம்
விஷ்ணுவை நிந்திக்கும் அன்றிமிகக்கற்றோர்களாகிய நிங்கட்கு

அளிக்காது விடுவனேல் யான் கசடனும் கயவனுமாகுவேன் கற்றோற்களிப்பவன் கண்ணுதலோனாலும் புகழப்படுவான். கற்றோனே பெரியோன், அவனே வலியோன், அவனே ஞானி அவனே யோகி, அவனே அழியாச்செல்வத்தை உடையோன், அவனே ஈகையோன், அவனே முக்காலமுமுணர்பவன் எக்குலத்தோனாயினும் இவனே மேலோன், ஹே! ஸ்வாமி இவர்களை நிந்திப்பவனும் இவர்கட்குக்கொடாதவனுமெவனோ அவனே விலங்கு, அவனே சுனகன், அவனே மூடன், அவனே வறியன், எவ்வளவு செல்வமுடையோனாயினும் இவனே வேசரி, மேன்குலத்துதித்தோனாயினும் இவனே கீழோன் ஸ்வாமி இப்படி நூற்கள் முறையிடுகின்றன. ஆகையால் நிங்களை யான் விடுவனேல் யான் சுனகத்தினுஞ் சுனகமாகுவேன் என்று மலரடி பணிந்தான்.

அப்போது நீர்வளம்பொருந்தும் மிழற்பெம்மானைக் கண்ணுதலோன் களித்து ஹே புருஷோத்தமனான மனுவே நீ கொடிய விரதஞ்செய்கின்றனை, இஃது யாமறிவோம் இது மெத்த கஷ்டமே ஆனால் நீ பெரும் பட்டினியுற்றும் வீடு புகாமலும் ஸ்நானயாறுதிகள் செய்யாமலும், நித்திரை உறாமலும், நித்யகர்மானுஷ்டானங்கள் விடுத்தும் இருப்பதில் யார்க்கு என்னை நஷ்டம் பாபம் வந்து என்ன செய்யும், பாபத்திற்குப்பயந்தோ நின்தனத்தை பெறப்போகின்றோம் இல்லை இதற்கோ உமாநாயகன்மகிழ்ந்து நீ விரும்பியதெய்தும்படி செய்யப்போகின்றான். இஃது ஒருநாளுமில்லை, யுகாதியுகங்களாகத்தவஞ்செய்யும் தவசிரேஷ்டர்களுக்கும் இந்திராதிதேவர்கட்குங்கூடக் காணக்கூடாத ஒப்பற்றபெருமானின் றிருவருட்பெருங்கருணையையோ நீ நாடப்போகின்றனை காண்டி என்று சிரித்தார். அப்படிசிரித்த உமாநாயகனைப்பார்த்து தனத்திற் கிருப்பிடமானவர்களே பிருதுவினிடத்துத் தோன்றும் ஒவ்வொன்றுமழியத்தக்கதே நிலைபெற்றுய்வது எஃதா பிருதுவுமுதலான பஞ்சபூத பௌதிகங்களுமடியுமென்கிறபோது மானுடயாக்கையோ நிலைபெறும் இஃது ஒரு நீர்மேற்றோன்றும் புற்புதமன்றோ எற்றைக்கிருப்பினு மரணமுடிவினை

யுகாந்தகாலத்திறுதியில் பதினான்குலகத்துள்ள வுயிர்களும் ஸ்ரீமந்நாராயணமூர்த்தி கெற்பகோளத்தின்கண் அடங்குமன்றோ, திருமூர்த்திகளன்றி நிலைபெற்றுய்பவர்கள் யார்? ஆகையால் தவவிரதங்களிற் படிந்து ஞானாதிகளைக்கற்று சத்தியத்தையும் புகழையும், நீதியையும், நிலைநிறுத்தவேண்டும் அலது உயிர்துறக்கவேண்டும், ஆகையான் மறுத்துமொழிவது அடிகள்போன்ற பெரியோர்கட்கு அழகன்று என்றுவேண்டினான். அப்போதுபடியளந்தோனான பஞ்சாயுதன் மதித்து ஹே! மனு எங்களிருவரையும் நீ நன்கு மதித்திருக்கின்றனை இத்தன்மையுள்ள யாம் என்று அறிந்திலை. அஃதை இயம்புவோம் கேட்டி,

நன்றி என்பதை அறியேம் பாபத்தைபாரோம், பழியை எண்ணேம் யாருக்கும் அஞ்சேம் தீயது செயமிகவல்லோம் நன்மை பாரோம், கொடுப்பவன் என்று உணர்ந்தால் மனையாளையுங்கேட்போம் உடல்பொருள் ஆவிமூன்றையும் கவர்வோம் பின்நன்றியாராட்டோம் பிறர் பொருள்வெளவுவதில் மிககொடியேம் ஆகையால் இத்தன்மையோர்கள் தானம் பெறவேண்டியவர்களினின்றும் விலக்கானவர்கள் அன்றோ ஆதலால் நீ எங்களை அதிதியாகவரிப்பது நன்றோ.

இஃது எத்தன்மையானாலுமாகுக பஞ்சதருக்களும் சங்கநிதிபதுமநிதி காமதேனு முதலானதுகளுமோ விரும்புவதை எளிதிற் அளிக்காதே அப்படியிருக்க எங்கட்கு நீயோவேண்டியதளிப்பது எங்ஙனம் இஃது செல்வசெருக்கினாலன்றோ என்றான்.

அப்போது வேதியத்திலகர் நீவிர் உரைப்பது மெத்தநன்று நிங்களை நோக்கின் யோகதேஜஸும், ஞானதேஜஸும், செல்வதேஜஸும் மிகப்பெற்றுள்ளீர்கள் நிங்கள் தேஜஸுக்கு வடநிழல் மூர்த்தியும் பாற்கடற்றலைவனும் பொருட்டாகமாட்டார்கள். தவிர, எவ்வுயிர்களிடத்தும் ஈசன் கலந்துளன் ஆகையான் எவ்வுயிரும் ஈசனே எவ்வுடலும் ஈசனாலயமே எவ்வுயிரும் எம்முயிர் போற்காத்தல் எனத் கடன். நீம்பார்கட்குக்கொடாதது யாவ

ர்கட்குமியல்பு அந்நியோர்கட்குங் கொடுத்தலன்றோ என து
திறன்நிலையில்லாத செல்வத்தைப்பற்றிநிலையுள்ள புகழைஅடை
யாது விடுவனோ, அப்படிவிடுபவன் விலங்கன்றோ. எவ்வகையினு
மறுப்பது நின்கள் பெருந்தகைக்கு மாறுகுமென்று பணிந்து
கெஞ்சி பயந்து வலறினான். அப்போது இவர்கட்குப்புடையே
நின்ற ஐங்கரக்கடவுள் கருணைகூர்ந்து அம்பகஞ்சுழற்றி பதும
பாணியாலஞ்சேல் போதங்குன்றேல் ஐயம் நீக்குதி எனத்திருவு
ளம் பூக்கப் பூத்தான். அப்போது மனு அந்தணச்செல்வன்
அறைந்ததை தீர்க்கவாலோசித்து இச்சிறுவர்க்கித்தன்மையான
பேரறிவும் பெருந்தகையுங் கருணைநோக்கும் எங்கனம் வாய்க்கப்
பெற்றது யாதோ வினை வியப்புளது இஃது அறிதேயென்று
மைந்தனை நன்கு மதித்து மாமூலைக்கிறைவனை மனத்துளிறுத்தி
மண்ணுறப்படிந்து முடியுறத்தாழ்ந்து பக்திபென்னும் பெரும்
வடத்தா லிருவரையுஞ்சேர்த்துப் பிணித்துத்தன் அறிவாகிய
தூணிற்கட்டி தன்கரக்கமலத்தாற்றுள் கமலத்திற்மாட்டி வைரா
க்யமென்னும் பெருஞ்சாவியாற்பூட்டி கனிந்து கிடந்தான்.

அப்போது இன்னல், பயம், பிணிநோய், பகை, சோரம்,
கொலை, பக்தர்கட்கு அடையாது காக்க அராவணைத்துறந்து ஆயர்
புகுந்து, அசோதை களிக்க, தராதலம் புகழ வெண்ணெ வெள
வ்வி, மத்தடியுற்று, மணங்கமழுங் கூந்தலையுடைய கோபியர்
அமுர்தபானமுண்டு மருதந்தவழ்ந்த புராதனனானவன் கூடற்
புகுந்து தென்னவன் பொன் வெள்ளி மண்சுமந்து வாணிபிட்ட
ருந்தி, பிரம்படியுற்று பொன்மாலைகளிக்க தடாதகைத்தழுவிசூரி
யசந்திராக்கினியைக்கண்களாகவுடைய எம்பெருமானைப் பார்
த்து ஐய! இவன் மகாக்கொடிய பாபன் ஹரிஹரன் தலங்க
டோறும் பதிந்து பாபம் அறுத்து புண்யமீட்டி வருகின்றநம்மை
தடைசெய்கின்றான் அநேக நியாயங்கள் பேசுகின்றான். அவாவி
லாவற்றவன் ஆகையாற் இவன் நாலேழுகோடிவருடம் நரகெய்
துவான் பெய்துமுய்யான் என்றுரைத்து நகைத்து தேவதேவ
நீ எக்காரியமுஞ்செய்வை செய்யாமையுநிற்பை செய்வினைக்குஞ்

செய்யாமைக்கும் நீயே காரணன் நின்னை மறுப்பவர் யார் செய்யின் என கட்டளையிடுபவர் யார் கடவனைக்காய்பது நின் அருட்பெருங்கருணைக்குக் கடமை யன்றோ என உரைக்குமுன் ஹே! மனு நின்விரதத்திலும் வேண்டுகோளினும் மகிழ்ந்தோம்வேண்டுவதீயவல்லேமென்கின்றனை நீ நின்னரசாட்சியையும் மாடகூடங்களையும் நினக்குச்சொந்தமாயுள்ள அனைத்தையும் இப்போதே கொடுத்தி என்று மலர்கரம்நீட்டினார்.

அப்போது மனு உவகைபூத்து ஸ்வாமி அடிகள்போன்ற அந்தணர்கட்குயாம்அளித்தவைநிற்க எனக்குசொந்தமாயுள்ள அனைத்தையும்நிங்கட்குஇதோஅளித்தேன கொள்ளுதி கொண்மின் என்றுஇருவர்கையினும்தாரைநீர்பெய்தான் அப்போதுபிர்மாதி இந்திரன் முதலானதேவர்கட்கும் நினைத்தவற்றையுங் கேட்டவற்றையும் அளிக்கும்படியான பெருமைவாய்ந்த இப்பெரிடக் கடவுளிருவருங் கருணை கூர்ந்து இப்பக்தனுக்கு திருவருட் பிரகாசமுண்டாமாறு செய்யவேண்டுமெனத் திருவுளங்கொண்டு ரிடபவாகனாரூடராய் பார்பதிசமேதராகவும் கெலுழவாகனாரூடராய் மகாஇலக்குமி சமேதராகவும் விண்ணிடம் இருபாலும் பிரகாசித்தார்கள் அப்போது மனு நோக்கி

நீலநெடுங் கிரிபோன்றமேனியோடு நித்திலங்கள்
தொடுத்த பொன்மேனிகண்டான்
கோலமுறும் பாசுபதச்சூலத்தோடு குளிர்சங்கு
நேமிகோதண்டங்கண்டான்
காலமலர்போன்மலர்ந்த கமலத்தோடுந்திருத்துழாய்
கொன்றை கூவிளமுங்கண்டான்
சேல்விழிநேர்சுந்தர குசாம்பியோடு சீர்மகளு
மிருபாலுந்துலங்கக்கண்டான்.

வானோடுவையகமு மேற்றப்பெற்றேன்
வான்மதிக்குந்திருப்பாதம் நான்கும்பெற்றேன்
கோனோடு குடியுலகமுழுதும்பெற்றேன்
கும்பமுலைதிருவோடு உமையுங் கண்டேன்

தேனோடு பூக்குறத்தி காலையோடு திருவீழிமிழற்
றெய்வீரெவையும் பெற்றேனிங்கு
ஊனோடு உடற்சுமந்த எளியேன்போல
இவ்வுலகிலெவர்பெற்றுரெழிலைபொப்பீர், என்று

அச்சங்கொண்டு பேரானந்தம் பூத்து எழுந்தான்; பாடினான் துள்ளினான், விழுந்தான், ஞானபாதங்கள் முடிச்சூடினான் கண் ஒற்றினான். மார்பு வந்தினான், உச்சி ஏற்றினான். முகம் மோர்ந்தான், யுகாதியுகங்களாகத் தேடியுங் காண்பதற்கரிதாகிய பாதங்களை பார்த்தான். தத்துவஞானமிர்தத்தை வாரிவாரியுண்டான், ஆனந்தக்கண்ணீர் உகுத்தான். பதுமத்திறை முதலான கற்பகாட்டிறைக்கும் ஏககாலத்தில் காட்சியாநுக்ரகஞ் செய்யாத தெய்வங்காள் சிறியேன் என்னதவம், என்னமகம், என்ன விரதங்கண்டேன், தெய்வத்தலைவர்காள் அறியேனிடத்து அனுக்கிரகஞ்செய்த பாக்யமேபாக்யமென்றுபலவாறு இறங்கிப்பண்ணி

திருவுறைமாற்கு நேமி அளித்தகண் மிழலாய்போற்றி
உருவுறை அருத்திநாதன் வதிட்டனுள் ஒளிர்வாய்போற்றி
மருவுறை மனுவாமெற்கு மானநற்றந்தாய் போற்றி
தருவுறை கற்பநாட்டான் றழைக்கின்றறளிரேபோற்றி

தேசினிவனத்தோய் தெய்வத்திருவிழிமிழலாய்போற்றி
காசினிபுகழற்கேற்ற கல்யாணபுரத்தோய்போற்றி
மாசிலாமணியேபோற்றி மரகதச்செடியே போற்றி
பூசுரர் புனைந்துபோற்றும பொன்விழிமிழாய்போற்றி

மனுதபத்தூறிற்புக்கு மாசுடர் மணியேபோற்றி
தனுசிலைவரையாய்போற்றி தறுக்கடாவெறிந்தோய்போற்றி
அநுதினம் புகழற்கேற்ற அந்தரத்தரசே போற்றி
மனுவெனுநாமந் தந்தேம் பெறுதிமாதேவே போற்றி.

இந்திரன் முதலாயுள்ள தேவரோடிருவர் போற்றுஞ்
சுந்தரக்குசாம்பிகைக்குத் தணைவனாய்வந்தாய்போற்றி
அந்தரம் கின்னுபோநத வத்தாணிக்கரசே போற்றி
மந்தரத்தவர்கள் போற்றும் மங்கலக்கொடியோய் போற்றி

ஆடகனை அழித்ததிருநகராய் போற்றி
அந்தகனை விண்புகுத்தும் வரனேபோற்றி
தேடறியத்திருத்துழாய்மாலே போற்றி
திரிபுரத்தை நீருபட வெரித்தோய்போற்றி
ஊடரிய வூடலது உகந்தாய்போற்றி
உணர்வுடையோர் உணர்தற்கரியாய்போற்றி
சேடனது மணிமுடியை மிதித்தாய் போற்றி
செய்யதிருவிழிமிழற்கரசேபோற்றி என்று

தோத்திரங்கட்செய்தான் அப்போது உம்பர்கள் மலர்மாரி
பெய்தார்கள், ஆனந்தங்கொண்டு கூத்தாடினார்கள் இவ்வுலக முத
லான எவ்வுலகங்களையும் இவன் வேதவழிநிற்குமாறு அடக்கி
காத்து புரக்கும் பேரறிவையும் பேராண்மையையுமுடையனெ
ன்று மகிழ்ந்தார்கள். அப்போது மாமலைப்பிராட்டி நாயகன்
அருட்கண்சாற்றி அன்ப, நிற்குவேண்டிய வனைத்தும் சதுர்மு
கத்தேவையளிக்கச்செய்தேம் பஞ்சபூத பௌதிகங்கள் உளநாளு
மப்பாலும் நின்புகழை அழிக்கேம் இறுதியிலெம் பதமளிப்
போம் இவ்வுலகமாகிய ஓர் தேருக்கு அஞ்சுகவாணி ஆகுவை.
என்று திருவாய்ச்சாற்றினர். உடனே திருவின்றேழனுங்கிளை
ர்ந்து எமது மானஸத்திற்றேன்றிய பக்த நினை வெல்ல எத்தே
வர்களாலுமாகாது. நின்சீர்த்திக்கு யாவரு மஞ்சுவர் அஷ்ட
திருவும் நினைவிட்டகலாவண்ணம் அநுக்கிரகம்செய்தோம்என்று
திருவாய் மலர்ந்தார். அப்போது மனு படிதேவிக்கும் மந்தா
கினி பெண்ணுக்கும் கொழுனர்களான அடிகளே அறியேன்
வேண்டுவது இன்னமொன்றுளது. அஃதையுமளித்தி

அஃதாவது யான் மகஞ்செய்த இவ்வியாகசாலைபால் இப்படி
யுள நாளுமப்பாலும் களிற்கடவுள் வேற்கடவுள் மலர்தேவு மார
வேள்தேவு முதலான திருஉவாதேவி சமேதராக இவணுறை
விடமாகக்கொண்டு நிலைபெறவேண்டுங் கணநிகளும் முப்பத்து
முக்கோடி தேவர்களும் கற்பகநாட்டிறைமுதலான திக்குகுமாரர்

களும் இங்கு நிலைபெற, நின் விழா யானும என் வழியோர்களும் நடத்தல் வேண்டும் என்று வேண்டினான். அப்போது உமாநாயகனான அருட்கடல் உவகைபூத்து ஹே! மனு நமது தே னிவனைந்தில அநேக சிவலிங்கங்களாகப்பிரகாசித்து ஆங்காங்கும் வியாபித்து, வேண்டுவதை வெறுக்க நல்கி வருகின்றோம், நமது யாகசாலைமிசையுள விலிங்கத்தினிடத்தும், எப்போதுமுறைவோம், நீ ஐயுறேல் நமது திருக்கோயிலும், இஃதும், ஒன்றன்றோ, இஃதை பூசிப்பினும் அஃதைபூசித்ததாகக்கொள்வோம், விழா யாம் நினக்கு காட்சியளித்த சுபதினத்திற்றொடங்கி செய்யின் அப்போது யாராயினும் என்னை ஒருகால் நோக்கின் அவன் மகாபஞ்சபாதகங்களினுங் கொடியபாதகனாயினும் அவையனைத்தும் அறுத்து விரும்பிய தாங்கே யளித்து யெம்பதமுமளிப்போம், யாம்நினக்கு முன்னமேயளித்த விலிங்கத்தைஇருதரமுன்னினும் அல்லதர்ச்சனை செய்யினு மவனேயேகாதிபதியாவன் முக்காற் நினைந்து முப்போதும் வலம்வருவானாயின் பதினான்கு இந்திரபட்டம் பெற்று இந்திரபோகத்துள் மூழ்குவன், எமபால் முழுபக்தியை யுடையோனாயின், அவனையே யாம் திருமாலாகக்கொள்வோம், இத்தலத்திலுள்ளத்தீர்த்தங்களெல்லாம் எமதுமுடிமிசை நிற்கும் புனற்றீர்த்தமே. இம்மாடங்கள் எல்லாம் எம்றிருக்கோயில்களே. இம்மாடத்துற்றவர் என் கணாதிகளே, இத்தலம் எம் நேத்ரார்ப்பணபுரமே என்று கொள்வோம் என்று திருத்துழாய்த்தேவை நோக்க அவரும்மலர்ந்து விளங்கும் மரைமலர்முகத்தோய் யாமும் அவ்வண்ணமே அருள்வோம் இத்தலத்து எத்தேவை போற்றினும் அத்தேவும் விரும்பியதளிக்குமென்பது ஐயமின்றி கொள்ளுதி. ஒவ்வொரு பூர்வமக்கம் ஏகாதசதிதியினும் திரயோதசதிதியினும் எமை விதிப்படி அர்ச்சனை ஆராதனைகள் செய்தால் கைலபங்கிரியும் வைகுந்தமுஞ்சொந்தமாகும். தேஜினீவனத்துள் விளங்கும் திருவீழிமிழற்கோயிலும் இஃதும் ஒன்றேயாகும் என்று சாற்றி, இருவரும் திருவுருகரைந்துவிலிங்கமாகவும், பெருமாளாகவும், விளங்கினார்கள். ஏனையத்தேவுக

ளும் அவ்வாறேயாயினர்.

அப்போது மனுவானவன் திடுக்கிட்டு, கன்றையிழந்த ஆப்போலும், அன்புள்ள புத்ரனையிழந்த அன்னையைப்போலும், கண்ணையிழந்த காளையைப்போலும், வறிஞன் செல்வத்தைப்பெற்று பின் இழந்ததுபோலும், தாய் தந்தையை இழந்த மகனைப்போலும், பிரிவாற்றாமையான் வருந்தி, துக்கக்கடலுளாழ்ந்து, சிவலோகச் செல்வமே, வைகுந்தத்தரசே, தில்லைக்கிறையே ஆரூர் அண்ணலே, திருவேங்கடப்பெருமானே, திருவீழிமிழற் சிவமே, என்று பலவாறு புலம்பி, புலம்பி, அரற்றி, படியிற்வீழ்ந்து, எழுந்து, முன்சிவலிங்கப்பெருமானைக்கண்டு ஒருவாறுதேறி, மேனி வீங்கி, உளம்பூத்து, ஒவ்வொன்றிற்கும் இந்திரன் மாடத்திலும் பெரிதாக வாலயங்களமைத்து ஹே! மனுநாதஈச்சுரனே ஏ மனுநாதப்பெருமானே, என்று பலவாறு புகழ்ந்து இந்திரன் பவனி போந்து வருவதும் பின் என்றுரைக்கும்படியாக அநேக நாள் விழா வெடுத்து பேரானந்தத்துள் மூழ்கி, இந்திரபோகத்தினுமினிய போகத்தை யனுபவித்துக்கொண்டு வருகின்ற நாளிற் ஒருநாள் அநேக மன்னர்கள் புடைசூழும்படியாக தன்னாலமைக்கப்பட்டத் திருக்கோயிலுக்குட்புகுந்தான்.

அப்போது மங்கலக்கொடியையும் நேத்ரார்ப்பணபுரத்தையுமுடைய மனுநாதஈச்சுரன் மகிழ்ந்து விண்ணினின்றும் ஹே! மனு நீ இவ்விடமே புக்கியிருப்பின் நின் குடிகள் அரசில்லாமல் மெத்த வருந்தும், ஆகையான் நீ நின்நகருக்கேகி அரசு செய்யக்கடவை, ஒவ்வொரு வருடமும் ரிடபமதியிற் இவ்விடம் புகுந்து விசாகமீன் தோன்றும் புண்யபௌர்ணமிதிதியிலெம்மிருவரையும் அர்ச்சனைசெய்தால் வருட முற்றும் அர்ச்சனை செய்ததாகக் கொண்டு மகிழ்வோம் என்று மிழலை புகுந்தார். உடனே மனு உளம்பூத்து அந்தணர்களை வரித்து யாம் யெமது அயோத்திமாநகர் செலவேண்டும் நீவீர்கள் இவ்விடமே உறைந்து யாம்செய்த விழாவை எம்போற் செய்து வேதத்தியானஞ் செய்மின்கள் இத

ற்காக நிங்கட்கு இதைச்சூழ்ந்த பூமியையும் இறைமளித்திருக்கின்றேம் கொள்ளுதிர் என்றுக்கட்டளையிட்டு தம்மைக்காணவந்த மன்னர்களோடு களிறுமீது இத்தலம் வலம் வந்து கல்யாணபுரங் கண்டு கண்ணுதற் கடவுளிடம் விடைப்பெற்று அயோத்தி புகுந்தான்.

அப்போது பன்னீராயிரம் சூரியன்களும் ஒளிமழுங்கும்படியான இரத்தினங்கள் குயிற்றிய பைம்பொன் அரிகளார்ருங்கிய வத்தாணியானது வைகுந்தத்தின்றுந் தோன்றி மனுவிற்கு முன்பாக பொலிந்து விளங்கிற்று. அப்போது மனு ஆச்சரியங்கொண்டு இஃது என்னே என்று தன் மனதை வினவி சங்கித்தான் அப்போது வைகுந்ததேவு அசரீராக இவ்வத்தாணியை நினக்கு அளித்தேம் நீ இதன் மிசையுற்று ஏகாதிபத்யம் வகிப்பை இஃது தகுதி, சத்யம், பொறை, அறம் அஞ்சாத்தன்மை, இவைகளை ஈட்டும் இது நினக்கும் நின் வழியுதிப்போர்க்கும் சொந்தமாகும் இதன் மிசையுற்று அநேக சீர்த்திகளைப்பெறுவை நின் நீதியே உலகமுற்றும் படர்ந்து ஓங்கும் ஒருவாறு நினக்கு பின், நின் நீதிக்குக்குறைவு தோன்றுமேல் அப்போதெல்லாம் நாம் நின்வழி அவதாரஞ்செய்து அதை நிலை நிறுத்துவோம் என்றுவைகுந்தஞ் சென்றான்.

ஹே! முனிவர்காள் அதுமுதல் இந்த மனுவானவன் அவ்வாசனத்துற்று ஈரேழுலகமும் போற்ற இவ்வுலகத்தை ஏகசக்ராதிபதியாய் ஒப்பற்ற வாழியுருட்டி செங்கோன்நடாத்திவந்து அநேக நியாய முறைகளையும் ஸ்மிருதிகளையும் வேதங்களையும் வகுத்து அவைகட்குத் தன்றிருநாமஞ்சூட்டி அதன் வழி நிறுத்தி இவ்வுலகத்திற்கு நித்யமங்கல சுபயோகமுண்டாகும்படி புரந்து ஆறிலொரு கடாமைபெற்று தன்னுயிர்போற்காத்து சுகமாக வாழ்ந்து ஒவ்வொரு வருடமும் தேஜனிவனம் புகுந்து நேத்ரார்ப்பணஈச்சுரனான மனுநாதீஸ்பரனை அர்ச்சனைசெய்து ஆனந்தக்கடலுள் மூழ்கி வந்தான்.

கேளும் முனிவர்களே இத்தலத்தின் காதையைபடித்தவர்களும் வியந்தவர்களும் சொன்னவர்களும், நித்திய சுபயோக மங்கலங்களையுந் தீர்க்காயுளையும் பெற்று அழியாப் பரகதியை எய்துவர்கள்.

இந்தலத்தின் மூர்த்தியைக்கண்டு தெரிசிக்காமலும் அர்ச்சனாதிகள்செய்யாமலும் ஏகுவார்களானால் கற்றோர்கட்கு தருவதாகவாக்களித்து பின்பிறழ்கிறவர்களும் பாடல் பல கொண்டு ஒன்றுங்கொடாது அனுப்புகின்ற மூடர்களும் உலகாபிமானம் தேசாபிமானங் கல்வியாபிமானங் களிற்றலையிட்டு பாடு பாடுகின்ற புலவர்கட்கு சகாயஞ்செய்யாத அறிவிலாக்கயவர்களுமடைகின்ற நரகத்திற் சேர்வார்கள் என்று வேதங்கள் முறையிடுகின்றன என்று சொல்லிமுடித்து இனிஸ்வேதகேது சரிதையைச் சொல்லுகின்றோம் கேளீர்கள் என்று சொல்லத்துடங்கினார்

சுபம். சுபம். சுபம்.

முற்றிற்று.

18652

GOD SAVE ALL